செ.வெ.எண்:24 நாள்:23.8.2021

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மாநில அளவில் செயல்பட்டு வரும் ஓர் தமிழ்நாடு அரசு நிதிக் கழகம் ஆகும். 1949-ம் ஆண்டு துவங்கப் பெற்ற இக்கழகம் மாநில அரசியல் ஆதாரவுடன் இதுவரை எண்ணற்ற தொழிற்சாலைகளுக்கு கடனுதவி வழங்கி தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக நிகழ்கிறது.

இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் தற்போது இயங்கி கொண்டிருக்கும் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கும் பல்வேறு சிறப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கி வருகிறது.

தஞ்சாவூர் கிளை அலுவலகம் (முகவரி 2854/c1, N.G.K அப்பார்ட்மெண்ட் , அருள் தியேட்டர் எதிரில் நாஞ்சிக்கோட்டை ரோடு தஞ்சாவூர்) நாகப்பட்டினம் கிளை அலுவலகம் (முகவரி 69/89, பெருமாள் தெற்கு வீதி , நாகை – திருவாரூர் ரோடு , மலேசியா அப்பார்ட்மெண்ட் எதிரில் , நாகப்பட்டினம்-611001)- அலுவலகங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தர (MSME) தொழில்களுக்கான சிறப்பு தொழில் கடன் மேளா 27.8.2021 வரை நடைபெறுகிறது.

இச்சிறப்பு தொழில் கடன் மேளாவில் டிஐஐசி-யின் பல்வேறு திட்டங்களின் சிறப்பு அம்சங்கள் மத்திய , மாநில அரசுகளின் மானியங்கள் (மூலதன மானியம், 6 சதவீதம் வட்டி மானியம் மற்றும் இதர மானியங்கள்) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் போன்றவை குறித்த விரிவான விளக்கங்கள் தரப்படுகிறது. தகுதிபெறும் தொழில்களுக்கு தமிழக அரசின் 25 சதவீத முதலீட்டு மானியம் ரூ.50 லட்சம் வரை வழங்கப்படும்.

இந்த முகாம் காலத்தில் சமர்ப்பிக்கப்படும் பொது கடன் விண்ணப்பங்களுக்கு ஆய்வு கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை அளிக்கப்படும். (NEEDS) திட்டத்திற்கு ஆய்வு கட்டணம் முழுமையாக விலக்கு அளிக்கப்பபடுகிறது.இந்த அரிய வாய்ப்பினை புதிய தொழில் முனைவோர் / தொழிலதிபர்கள் பயன்படுத்தி தொழில் திட்டங்களுடன் வருகை தந்து தொழில் கடன் மற்றும் மத்தய மாநில அரசுகளின் மானிய சேவைகளை பயன்படுத்தி கொள்ளுமாறும்,இக்கடன் மேளா தொடர்பான விபரங்களுக்கு 737349431 , 9442540854 ஆகிய கைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.